ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ச. அக்ஷய வரு பங்குனிமீ பகுதி ௩.

Vol 4. *March & April 1927.* No. 3.

## பன்மணித்திரள்.

[ஆங்காங்குள்ள பலவரிய விஷயங்களைத் தோகுத்துப் பலருக்கும் புலனாகும்வண்ணம் பன்மணித்திரள் என்னும் பெயர் புனைந்து ஈண்டு எழுதப்பெறுகிறது.]

### கடற்கரை வெளியை நினைத்திரு.

இது, பட்டர் வீரசிகாமணிப் பல்லவராயன் என்ற அரசனை நோக்கி அருளியதாம். ஒருநாள் இவ்வரசன் பட்டரை நோக்கி ஸ்வாமி! அடியேனுக்கு ராஜ்யபரிபாலனஞ்செய்தற்குரிய கார்யங்கள் மிகுதியுமிருக்கின்றதினால் பகவத்விஷய வைபவம் கேட்பதற்குச் சிறிதும் காலமில்லை. இங்ஙனமிருக்கின்ற அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தவிசேஷம் அருளிச்செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்பொழுது பட்டர் கடற்கரை வெளியை நினைத்திரு என்று அருளிச்செய்தார். இதுகேட்ட அரசன் இதற்குப் பொருளறிய மாட்டாது நின்றான். இந்நிலைகண்ட பட்டர் அரசனை நோக்கிக் கடற்கரையில் ஒரு அமிர்தக்கடல் போல ஸ்ரீராமபிரான் வானரசேனைகளுடன் எழுந்தருளியிருந்தகாலத்து வானரர் இராவணன் பலசேனாபலத்துடனிருப்பதறிந்து ‘ராமபிரானுக்கு யாது தீங்கு நேருமோ?’ என்று மிகவும் ஜாக்கிரதையாய் ஸ்ரீராமபிரானைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

பின்பு நடுநிசியில் வானரர்கள் கண்ணுறங்கிக் காலோய்ந்து கைசோர்ந்து செயலற்றிருந்தார்கள். இந்நிலைகண்ட ராமபிரான் இளையபெருமாளுடன் வில்லேந்திய கையராய் நின்று பக்ஷிகள் தாம் பொரித்த குஞ்சுகளைத் தம் சிறகாற் பொதிந்து பாதுகாப்பது போல வானர சேனைகளுக்கு யாதொரு தீங்கு வாராவண்ணம் நாற்றிசையும் நடையாடுகிற மதில் போலச் சுற்றிவந்து பாதுகாத்தார். இவ்வாறு ரக்ஷித்த ஸ்ரீராமனுடைய கையும் வில்லுமே தஞ்சமென்றிருக்கக்கடவாய் என்றார். இதனால் போந்த பொருள் யாதென்றால்; உறங்குகிறபோது ரக்ஷிக்கின்றவன் உணர்ந்தால் ரக்ஷிப்பானென்பது சொல்லாமலே பெறப்படுமென்பதாம்.

---

தன்னடியார்சீர்த்திதனையறிந்தார்தண்ளேவோன்
மன்னுபுகழறிவார்மன்.

"ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு" என்றபடி ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரனை யறியுமறிவே அறிவாகும். அவனையொழிந்தவற்றை அறியுமறிவு அறிவாகமாட்டா. அவனையறிந்தொழுகினால், கணக்கிலடங்காக் காலமெல்லாம் பிறவிப்பிணியாகிய கடலில் விழுந்துவருந்துகிற நாம் அக்கடலைக்கடந்து கரையேறலாம். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்" என்பது ஆன்றோர் உரையன்றோ!

இதுநிற்க; ஸர்வேசுவரனை அறியவேண்டுமானால் சாஸ்திரமாகிய கருவியைக்கொண்டே அறியவேண்டும். அவ்வாறறிந்தாலும் அவனை முழுவதும் அறியவொண்ணாது. அவனடியார்களையறிந்தால் அவனை முழுவதும் அறிந்ததாகும். அவனடியார்களை அறிகையாவது அவர்களே பரம்பொருளாகவறிவதாம். "ஜ்ஞாநீத்வாத்மைவமே மதம்" "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" [ஜ்ஞாநியே எனக்கு உயிராவான்] என்ற பகவத்வாக்யத்தின்படி ஸர்வேசுவரன் தனக்குயிராகக் கருதிய ததீயரை அறிந்தால் அதன்மேலறியத்தக்க தொன்றில்லையாதலால் முழுவதுமறிந்ததாகு மென்றறியத்தக்கது. மேலும்,

"இருப்பிடம்வைகுந்தம்வேங்கடம்மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம்மாயனுக்கேன்பர்நல்லோரவைதன்னொடுவந்
திருப்பிடம்மாயனிராமாநுசன்................."

என்றபடி ஸர்வேசுவரன் பரமபத முதலிய விடங்களில் வைத்திருக்கும் அன்பைக் காட்டிலும் அன்பர் விஷயத்திற் பேரன்பு கொண்டு அவருடைய ஹ்ருதயத்தை உறைவிடமாகக்கொள்கின்றானாதலால், அவனது பூரணமான அன்பிற்கு விஷயம் ததீயரென்பது பெறப்படும். ஆதலால் ததீயரை அறிந்தவிடத்து அவனை முழுவதுமறிந்ததாய்விடுமன்றோ!

இன்னும், இதுவிஷயத்தைக்குறித்து ஒருவரலாறும் உரைக்கப்படும். அது வருமாறு:—அம்மணியாழ்வான் இருநூற்றுக்காதவழி நடந்துவந்து, பட்டரைத்தண்டன்ஸமர்ப்பித்து 'அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் அருளிச்செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தார். பட்டரும் அவரது அன்பிற்கிரங்கி, அடியார் பெருமையைக் குறித்துணர்த்துகிற "நெடுமாற் கடிமை" என்ற திருவாய்மொழிக்கு அர்த்தம் அருளிச்செய்து 'எம்பெருமானையறிகையாவது அவனை அரை வயிறுபட்டறிகை; ததீயரை அறிகையாவது அவனை முழுக்கவறிகை' என்றுரைத்தார். அப்பொழுது, அம்மணியாழ்வான் மனமுவந்து பட்டரை நோக்கி 'ஸ்வாமி! தேவரீரது பேரறிவுக்கேற்றபடி இன்னும் பலவர்த்த விசேஷங்களை அருளிச்செய்தால் அடியேன் மறந்து விடுவேன். இப்பொழுதருளிச்செய்த இதுவேபோதுமானது' என்று விடைபெற்றுச் சென்றார்.

ஸர்வேசுவரன், 'ஜ்ஞானியே எனக்குயிராவான்' என்றதனால் ஜ்ஞானி விசேஷணமாகவும், ஸர்வேசுவரன் விசேஷ்யமாகவுமாகிறார்கள். ஒரு பொருளை உணரும்போது அதிலுள்ள விசேஷ்ய விசேஷணங்களை ஒருங்கு சேர்த்துணர வேண்டும். ஸர்வேசுவரனைமாத்திர முணர்ந்தால் விசேஷ்யத்தை மாத்திரம் அறிந்தவனாகிறானாதலால் இங்குப் பட்டர் 'எம்பெருமானை யறிகையாவது:—அவனை அரைவயிறுபட்டறிகையாம்'என்றருளிசசெய்தார். "ததீயர்கின்னலாதிலேன் கண்டாய்" என்றபடி அவனையே பற்றுக்கோடாகக் கொண்டுள்ளவர்களாதலால் ததீயரையறிந்தால் விசேஷணவிசேஷ்யங்களை ஒருங்குணர்ந்தவனாகிறான். ஆதலால் இங்குத் ததீயரையறிகையாவது:—அவனை முழுக்கவறிகையாம்; என்று அருளிச்செய்தார். "ந்ரூஹெராயஸீஜெவடிவகஃஷுணவெஶுஷஜாஸவகஃ, விஹெதீய

ஶேஷித்வ ஸ்வரூபரூபஸம்ஸ்திதிஹி” “ந்யக்ரோதபீஜே வடவத் ப்ரணவே சப்தஜாலவத், ஸித்தே ததீய சேஷத்வே ஸர்வார்த்தாஸ் ஸம்பவந்திஹி” என்ற சுலோகமும் இங்கு அறியத்தக்கது. இதன் பொருளாவது:—ஆலின் விதையில் ஆலமரமடங்கி யிருப்பதுபோல வும் ப்ரணவத்தில் வேத முதலான சாஸ்திரங்களின் சொற்கூட்டங்க ளடங்கி இருப்பதுபோலவும் தனக்கு ஸித்தமாயிருக்கிற பாகவத சேஷத்வத்தில் எல்லா அர்த்தங்களும் அடங்கியிருக்கிறதன்றோ! என்பதாம்.

---

ஸ்ரீ:

# திருமந்த்ரார்த்தா நுசந்தானம்.

---

வேதங்களாலும் ரிஷிகளாலும் ஆழ்வார்களாலும் ஆசார்யர்களாலும் விரும்பப்பட்ட திருமந்த்ரத்தின் பொருளை பட்டர் அஷ்ட சுலோகி என்ற நூலில் வெளியிட்டுப் பின் எல்லோரும் எளிதாய் உணரும்படி வாக்கியரூபமாகவும் அருளிச்செய்தார். அது வருமாறு:—

(க) நஞ்சீயரான வேதாந்திகளுக்குப் பெரியபட்டர் ஏகாந்தத்திலே பணித்த பரம ரஹஸ்யம்:— திருமந்த்ரஜ்ஞானம் பிறந்தா

---

(க) பெரிய பட்டர் என்றது பராசரப்பட்டரை. வியாஸப்பட்டர் அவர் திருத்தம்பியாராவார். அவரின் வேறுபாடுதோற்ற இங்குப் பெரிய பட்டரென்று விசேஷித்துச் சொல்லப்பட்டது. திருமந்த்ர ஜ்ஞானம் பிறந்தாலும் என்றது திருமந்த்ரார்த்தஜ்ஞானம்பிறந்தாலும் என்றவாறு. பிறந்தாலும்என்ற சிறப்பும்மையால் அது பிறப்பது அரிதென்பது தோன்றுகின்றது. இங்கே இருக்கிறவனுகையாலே என்றது மேன்மேலும் அஜ்ஞானத்தை விளைக்கின்ற இவ்வுலகிலிருக்கிறவனுகையாலே என்றவாறு. ஸ்வரூபத்தோடே சேராத என்றது எம்பெருமானுக்கு மிகவும் அடிமையாயிருக்கிற ஆத்மாவின் இயற்கைக்குப் பொருந்தாத என்றவாறு. துரிதபரம்பரைகள் வந்துமேலிட்டால் என்றது பாபக்கூட்டங்கள் வந்து சேர்ந்தால் என்றவாறு. திருமந்த்ரத்தின் பதங்களின் அர்த்தங்களை அநுஸந்தித்து என்றது திருமந்த்ரத்திலுள்ள அகார, உகார, மகார, நம, நாராயண பதங்களின் அர்த்தங்களை நினைத்து என்றவாறு. பரிஹரித்துமீளுவான் என்றது முற்கூறப்பட்ட பாபத்திற்கு மூலமான நினைவுகளை அகற்றித் திரும்பக்கடவன் என்றவாறு.

னார் இங்கே யிருக்கிறவனாகையாலே ஸ்வரூபத்தோடே சேராத துரித பரம்பரைகள் வந்து மேலிட்டால், திருமந்த்ரத்தின் பதங்களின் அர்த்தங்களை அநுஸந்தித்து பரிஹரித்து மீளுவான்.

(௨) எங்ஙனேயென்னில்:—பஹு விரோதி பீஜமான ஸ்வாதந்த்ர்யம் மேலிட்டால் பகவத்பரதந்த்ரர் அல்லோமோ, நமக்கு ஸ்வாதந்த்ர்யம் கடவதோவென்று அகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(௩) அஸேவ்ய ஸேவைகள் வந்து மேலிட்டால், நாம் அந்யர்க்

---

(௨) பஹுவிரோதிபீஜமான ஸ்வாதந்த்ர்யம் மேலிட்டால் என்றது எல்லாப் பாபங்களும் உண்டாவதற்கு விதையாயிருக்கிற அஹங்காரம் அதிகரித்தால் என்றவாறு. அஹங்காரம் எல்லாப் பாபங்களும் உண்டாவதற்கு விதையாயிருக்கும் என்பதனாலன்றோ ஆழ்வார் "நீர்நுமதென்றிவை, வேர்முதல்மாய்த்திறை, சேர்மின் உயிர்க்கதன், நேர்நிறையில்லை" என்று அருளிச்செய்தார். இதனால் அஹங்காரம் எல்லாப் பாபங்களினும் தலை சிறந்ததென்பது பெறப்படும். பகவத்பாரதந்த்ரரல்லோமோ என்றது எம்பெருமானுடைய சொற்படிகேட்டு நடக்கும் இயல்புடையோம் என்றவாறு. [பாரதந்த்ரர்-ஸ்வதந்த்ரமற்றோர்.] நமக்கு ஸ்வாதந்த்ர்யம் வரக்கடவதோ என்றது அவன் சொற்படிகேட்டு நடக்கிற நமக்கு ஸ்வாதந்த்ர்யம் வரக்கூடாது என்றவாறு. அகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்றது அகாரத்தின் அர்த்தத்தை நினைத்து அஹங்காரபுத்தியை ஒழித்து முன்னின்றநிலையினின்றும் திரும்பக்கடவன் என்றவாறு. அகாரம் எல்லோருக்கும் தலைவனான எம்பெருமானை உணர்த்தும். அகாரத்திலுள்ள லுப்தசதுர்த்தியாலே [தொக்குநின்ற நான்காம் வேற்றுமையால்] ஆத்மா ஈசுவரனுக்கு அடிமையென்பது விளங்கும். இங்ஙனமுணர்த்துகின்ற அகாரார்த்தம் நெஞ்சிற்படுமாகில் அஹங்கார புத்தி அகலுமென்பது போந்தபொருளாம்.

(௩) அஸேவ்யஸேவைவந்துமேலிட்டால் என்றது தொண்டுசெய்தற்குரியரல்லாத அற்பர்கட்குத் தொண்டுபுரியும் செயல்கள் வந்தெய்துமானால் என்றவாறு. நாம் அந்யருக்தச்சேஷமோ என்றது எல்லோருக்கும் தலைவனான ஸர்வேசுவரனுக்கு அடிமையான நாம் பிறருக்கு அடிமையாவோமோ என்றவாறு. பகவதநந்யார்ஹசேஷபூதரல்லோமோ என்றது நாம் எம்பெருமானுக்கே உரிமையான தொண்டராவோமென்றவாறு. உகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்றது உகாரார்த்தத்தை நினைத்துப் பிறருக்கு அடிமையாயிருக்கும் நிலையினின்று மீளக்கடவன் என்றவாறு. உகாரம் இங்குப் பிரிநிலை ஏகாரத்தின் பொருளாய், பிறர்க்கு அடிமையன்றென்பதைச் சுட்டிநிற்குமென்றறியத்தக்கது.

குச் சேஷமோ, பகவதநந்யார்ஹ சேஷபூதரல்லோமோ வென்று உகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(ச) சரீரத்திலே கார்ச்ய ஸ்தூலாதிகள் மேலிட்டால், நாம் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபரல்லோமோ, நித்யரல்லோமோ, ஏகரூபரல்லோமோ, நாம் ஸ்வயம்ப்ரகாசமன்றோ வென்று மகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(ரு) நமக்கு ஒரு புருஷார்த்தம் ஸம்பாதிக்க வேண்டாவோ வென்று ஸாதநாநுஷ்டானம் பண்ணத்தேடினல் ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பகவத் பாதந்த்ரரல்லோமோ, ஸ்வதந்த்ரரன்றோ

---

(ச) சரீரத்திலே கார்ச்ய ஸ்தூலாதிகள்மேலிட்டால் என்றது சரீரம் மெலிவதையும், பருப்பதையுங்கண்டு 'நான் மெலிந்தேன்' 'நான் பருத்தேன்' என்று சரீரத்தில் ஆத்மபுத்தி வந்துசேருமானல் என்றவாறு. நாம் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபரல்லோமோ என்றது ஆத்மா ஜ்ஞாநம் ஆநந்தம் என்ற இரண்டையும் தனக்கு வடிவாகவுடையதென்றவாறு. நித்யரல்லோமோ என்றது ஆத்மா ஒரு காலத்திலுண்டானதென்பதின்றி எக்காலத்திலுமுள்ளதென்றவாறு. ஏகரூபரல்லோமோ என்றது ஆத்மா தேய்தல், வளர்தலின்றி எப்பொழுதும் அணுவடிவாயிருக்குமென்றவாறு. நாம் ஸ்வயம்ப்ரகாசமன்றோ என்றது ஆத்மா தன்னையறிகைக்குப் பிறிதொரு துணையில்லாமல் தன்னைத் தானே அறியுமென்றவாறு. மகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்றது மகாரத்திற்குரிய பொருளை நினைத்து தேகமே ஆத்மாவென்று கருதிய முன்னின்ற நிலையினின்றும் திரும்பக்கடவன் என்றவாறு. மகாரம், இருபத்தைந்தாம் அக்ஷரமாகையால் இருபத்தைந்தாம் தத்வமாகியஆத்மாவையுணர்த்தும். மேலும் மகாரத்திற்கு ஜ்ஞாநமென்பதும், அணுவடிவென்பதும் பொருள்களாதலால் ஆத்மா ஜ்ஞாந ஸ்வரூபனென்பதும், அணுவடிவினன் என்பதும் பெறப்படும். இப்பொருள் நெஞ்சிற்பட்டால் சரீரமே ஆத்மா என்கிற மயக்கவுணர்வு ஒழிந்துவிடும்.

(ரு) நமக்கு ஒரு புருஷார்த்தம் ஸம்பாதிக்கவேண்டாவோ என்று ஸாதநாநுஷ்டானம் பண்ணத்தேடினல் என்றது நாம் ஈசுவரனை யடைதலாகிய புருஷார்த்தத்தைச் சேகரிக்க முயலவேண்டாவோ எனக்கருதி அதைப் பெறுகைக்குக் கர்மயோகமுதலிய ஸாதன கார்யங்களைச்செய்ய ஆராய்ந்தால் என்றவாறு. ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பகவத் பாதந்த்ரரல்லோமோ் என்றது ஆத்மா தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்வதற் குரிமையற்று அவன் (ஸர்வேசவான்) சொற்படி கேட்டுநடக்கும் இயல்பினன் என்றவாறு.

ரக்ஷணத்திற்குக்கடவன் என்று நமஸ்ஸிலர்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(சு) தனக்கு உபகாரமாக எழுந்தருளியிருக்கிற அர்ச்சாவதாரத்திலே சில குறை வந்துபிறந்து கண்ணுக்கு விஷயமானால், சேதனனுடைய இழவுக்கு ஈசுவரன் "ஹ்ருஸம்ஹவதிஃ வித" "ப்ருசம் பவதிதுக்கித" னுமாப்போலே, ஈசுவரனுடைய இழவுக்கு துக்கிதனுகாதபோது நாராயணபதத்தோடு உறவுபோட்கனென்று அநுஸந்தித்து பரவ்யூஹவிபவாதிக ளெங்குமுள்ள குறைகள் தீர்ந்த விடமன்றோ, ஒன்றுமொரு குறைவற்ற விடமன்றோ, அநுபாவ்யமெல்

---

ஸ்வதந்தரனன்றோ ரக்ஷணத்திற்குக் கடவனென்று நமஸ்ஸில் அர்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்றது ஆத்மாநுபவத்தில் விருப்புடைய கைவல்யன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்குத் தானே உரியவனுவானென்று கருதி நமப்பதத்தின் பொருளை நினைத்து முன்னின்ற நிலையினின்றும் திரும்பக்கடவன் என்றவாறு. நமப்பதத்தின் பொருளாவது:—எனக்கு நான் உரியேனல்லேன் எம்பெருமானுக்கேஉரியேன் என்பதாம். இந்த நமப்பதத்தின் பொருள் நெஞ்சிற்பட்டவுடன் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்வதென்ற ஸ்வதந்தாபுத்தி ஒழியுமென்பது பெறப்பட்டது.

(சு) தனக்கு உபகாரமாக எழுந்தருளியிருக்கிற அர்ச்சாவதாரத்திலே சில குறை வந்து பிறந்து கண்ணுக்கு விஷயமானால் என்றது தான் நேரே தரிசித்துத் தன் குறைகளை விண்ணப்பித்து விரும்பிய பயனையடைதற்கு உபகாரமாக கோயில்களில் எழுந்தருளியிருக்கிற அர்ச்சாவதார எம்பெருமான் விஷயத்தில் 'இது, செம்பு, பொன் முதலிய பொருள்களானுக்கப் பட்ட விக்ரஹம், யாது பயனைத் தரப்போகிறது?' என்கிற குறைகள் கண்ணுக்குப் புலப்படுமானல் என்றவாறு. சேதனனுடைய இழவுக்கு ஈசுவரன் 'ப்ருசம்பவதிதுக்கித' னுமாப்போலே ஈசுவரனுடைய இழவுக்குத் துக்கிதனுகாதபோது நாராயண பதத்தோடு உரவுபோட்கனென்று அநுஸந்தித்து என்றது ஆத்மா, ஈசுவரனை இழந்துநின்றதற்கு ஈசுவரன் மிகவும் துக்கிப்பது போல ஈசுவரன் ஆத்மாவைக் கைவிட்டவிடத்து இவன் துக்கமடையாதபோது நாராயண பதத்தோடு உறவற்றதென்று நினைத்து என்றவாறு. [போட்கன்-கதியற்றவன். "...போட்கனேன் வந்துநின்றேன்" திருமாலை 33] சேதனனுடைய இழவாவது:— ஈசுவரன் 'உன்னை ரக்ஷிக்கிறேன்' என்றவிடத்திலும் 'நீ என்னை ரக்ஷிக்கவேண்டா' என்று அவனுடைய உறவை விலக்கி ஹிரண்யனைப்போல அஹங்கரித்துத் திரிவதாம். ஈசுவரனுடைய இழவாவது:— ஆத்மாவுக்கு ஈசுவர விஷய ஜ்ஞானம் சிறிதுமின்றிப் பாபச் செயலில்மண்டி அர்ச்சாவதார விஷயத்திலும் வேறுபடக்கருதும் இவனது

லாம் நாரசப்தாந்தர்க்கதமன்றோ வென்று நாராயண பதத்தை யநுஸந்தித்து மீளுவான்.

தொடரும்.

---

கொடிய நிலைமையைக்கண்ட ஈசுவரன் 'இவன் நமது பொருளில்லை' என்று கைவிட்டிருப்பதாம். இவ்வாறு ஸர்வேசுவரன் கைவிடும்படி அறப்பெரிய பாபத்தைச்செய்து அவன் விஷய ஜ்ஞாநம் சிறிதுமில்லாத ஆத்மா ஸத்தையற்றதாகவே ஒழியும். இதனால் இவ்வாத்மாவுக்கு நாரபதார்த்தங்களுள் ஒன்றாக மதிக்கப்படாத நிலைமை வந்தெய்தும். எய்தவே இதற்கு நாராயணபதத்தோடு உறவுமற்றுவிடும் [நாரமென்பது ஈசுவரனை ஒழிந்த எல்லாப் பொருள்களையும் குறிப்பிடும். அயநம் - அவற்றிற்கு ஆதாரமாயிருப்பவன். ஸர்வேசுவரன் தன்னைஒழிந்த எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் விளங்குகின்றானதலால் அவனுக்கு நாராயணனென்று பெயர் வழங்கலாயிற்று.] பரவ்யூஹ விபவாதிகளெங்குமுள்ள குறைகள் தீர்ந்தவிடமன்றோ என்றது பரவ்யூஹ ஸ்தானங்களாகிய பரமபதத்திலும், க்ஷீராப்தியிலும் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுக்கு எல்லோரும் சென்றணுகப்பெறுதற்கு யோக்யமில்லாதிருக்கிற குறைவுண்டு. விபவமாகிய ராமகிருஷ்ணாத்யவதாரங்களைக் காலக்கழிவால் கண்டு பற்றமுடியாததலால் அவ்வவதாரங்கட்கும்இப்பொழுது விரும்பினார்கட்குத் தரிசனந் தாராதிருப்பதோர் குறைவுண்டு. கோயில்களில் விக்ரஹ ரூபியாய் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் எல்லாத் தேசத்திலும், எல்லாக் காலத்திலும் அதிகாரி அநதிகாரி என்றவேறுபாடின்றிஎல்லோருக்கும் ஸேவை ஸாதிக்கின்றானதலால் இக்குறைகள் ஒன்றுமில்லை என்றவாறு. ஒன்றுமொரு குறைவற்றவிடமன்றோ என்றது அர்ச்சாவதாரத்தில் சுலபகுண முதலிய எல்லாக் குணங்களும் பூர்ணமாயிருக்கின்றதினால் இதில் ஒரு குறையுமில்லை என்றவாறு. அநுபாவ்யமெல்லாம் நாரசப்தாந்தர்க்கதமன்றோ என்றது அநுபவித்தற்கு யோக்யமானவையெல்லாம் நாரம் என்ற சொல்லிற்குள் அடக்கம் என்றவாறு. இங்கு அநுபவித்தற்கு யோக்யமான பொருள்களெல்லாம் என்றது அர்ச்சாவதாரத்தையும், அதனிடத்துத் தோன்றும் குணவிசேஷங்களையும் சுட்டிநின்றது. "ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன்பாயே, நீராயலைந்து கரையவுருக்குகின்ற நெடுமாலே" என்று ஆழ்வாருக்கு அர்ச்சா விக்ரஹமும், அதனிடத்துத்தோன்றும் குணவிசேஷங்களும் அநுபவ யோக்யப் பொருள்களாயிருந்தமை காணலாம். இன்னும் அர்ச்சாவதார எம்பெருமான் தனக்கு இயல்பாயுள்ள சக்தியைமறைத்து அர்ச்சகவசமாகி நிற்கும் நிலையைக்கண்டு 'இந்த அர்ச்சாவிக்ரஹம் எந்தப் பலனையும் தரவல்லதில்லை; இதில் ஈசுவராவேசமுண்டெனக் கொள்வதெப்படி? ஆவேசித்திருப்பானாகில் சக்தி வெளிப்படவேண்டுமே' என்று வேறுபடக்கருதுவாரின் சந்தேகத்தை ஒழிப்பதற்கு நாரசப்தாந்தர்க்கதமென்றார். அர்ச்சா விக்ரஹமும் நாரவஸ்துக்களுள் ஒன்றாம். ஒன்றொழியாமல் எல்லாப் பொருள்களிலும் ஆவேசித்திருக்கிற ஸர்வேசுவரன், அர்ச்சாவிக்ரஹத்தையும் தனக்குத் திருமேனியாகக்கொண்டு விளங்குகின்றானென்பதில் யாது தடையுளது? இந்த நாராயணன் என்ற சொல்லிற்குப் பொருள் மனதிற்படுமாகில் அர்ச்சாவதார எம்பெருமான் விஷயத்தில் வேறுபடக்கருதுகிற கெட்ட சிந்தையும் ஒழியுமென்பது போந்தபொருளாம்.

ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

---

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஸ்ரீபாஷ்யத்தில் அத்ரதிகரண பாஷ்யத்தில் 'த்ரையந்த நிஷண்ணுதாஸ்து' என்று தொடங்கி ஸ்வாபாவிக பரமாத்மாநுபவமே மோக்ஷமென்று நிரூபித்திருப்பதாலும், '𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑍋 𑌮𑌹𑌾𑌨𑌨𑍍𑌦𑌃' 'முக்திர்மோக்ஷோமஹாநந்த:' என்கிறகோசத்தாலும், அந்த மோக்ஷம் மஹாநந்தரூபமென்று சொல்லியிருப்பதாலும், கேவலாத்மாநுபவமாயும், அல்பாநந்தமாயுமிருப்பதால் இதை மோக்ஷமென்று வ்யவஹரிப்பது எங்ஙனே என்னில், கீழ்உதாஹ்ருதங்களான அநேக ப்ரமாணங்களாலே கைவல்யம் மோக்ஷமென்றேற்படுகிறபடியால் உபயஸாதாரணமாக அவித்யாநிவ்ருத்தியே மோக்ஷமென்று கொள்ளவேணும். அத்ராதிகரணபாஷ்யத்தில் வாதிகள் பலரும் மோக்ஷத்தை அநேக ப்ரகாரமாகச் சொல்லியிருப்பதால் அத்தை நிராகரிப்பதற்காக பரமாத்மாநுபவமே மோக்ஷமென்று நிரூபித்தபடி; அந்த வ்வகாரத்தால் இதர வாதிகளுடைய மோக்ஷத்தை வ்யாவர்த்திக்கிறது. ஆகையால் அது சம்பவாபிப்ராயம்.

அதுவுமன்றி ஸாலோக்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்கிற இவைகளும் மோக்ஷசப்தவாச்யமாகையாலே கேவலபரமாத்மாநுபவமே மோக்ஷமென்பது ஸம்பவாபிப்ராயம்; அதுலக்ஷணமன்று. மோக்ஷங்களில் முக்யமோக்ஷமென்றும், அமுக்யமோக்ஷமென்றும் இரண்டிருப்பதாகத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் 'குறுக மிக' என்கிற பாட்டு வ்யாக்யானத்தில் அருளிச்செய்திருப்பதால் ஸ்வாபாவிக பரமாத்மாநுபவமென்கிறஇது முக்யமோக்ஷபரம். கைவல்யாதிகளில் சொல்லுகிற மோக்ஷசப்தம் அமுக்யமோக்ஷபரம். உபயஸாதாரண மோக்ஷசப்தார்த்தம் அவித்யாநிவ்ருத்தி. ஆனால் நி:சேஷகர்ம நிவ்ருத்தியேற்பட்டால் பகவதநுபவம் இல்லாமல் கேவலம் ஆத்மாநு

பவமே வருமென்பது கூடுமோவென்னில்? உபாஸநாரம்பத்தில் கைவல்யாதிகாரி ப்ரக்ருதிவியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தியையே புருஷார்த்தமென் றத்யவஸித்து உபாஸித்தபடியால் அந்த உபாஸநத்தாலே ப்ரீதனுனஸர்வேச்வரன் தத்க்ருதுந்யாயத்தாலே உபாஸநாநுகுணமாக பலப்ரதானம்பண்ண ஸங்கல்பித்திருப்பதால் அந்த ஸங்கல்பத்தாலே இவனுக்கு பகவதநுபவம் ஏற்படவில்லை. ப்ரதிபந்தக கர்மநிவ்ருத்தி மட்டும் ஏற்படுமேயன்றி உபாஸநஜநித ஸங்கல்பத்துக்கு நிவ்ருத்தியேற்படமாட்டாது.

'ஐ,ஹ்மலோகாநுமயதி' 'ப்ரஹ்மலோகாங்கமயதி' என்கிற இடத்தில் ப்ரஹ்மைவலோக: என்று கர்மதாரயஸமாஸத்தைப்பண்ணி ப்ரஹ்மலோகசப்தம் ப்ரஹ்மரூபப்ராப்யபரமாக நிர்வஹித்து, 'அதிதிவாஸாந்' 'அதிதிபாசாங்' என்கிறஇடத்தில் எப்படி பஹுவசனம் அவிவக்ஷிதமோ அப்படியே லோகாங் என்கிற இடத்திலும் பஹுவசனம் அவிவக்ஷிதம் என்று நிரூபித்து, அநந்தரம் ப்ரஹ்மணோ லோகாங் என்று தத்புருஷஸமாஸத்தைப்பண்ணி லோகசப்தம் ஸ்தாநபரமாக நிரூபித்து லோகங்களே நித்யவிபூதியில் அநேகங்களாயிருப்பதால் பஹுவசநஸ்வாரஸ்யத்தைப்பற்றி இப்படியொரு கல்பமிருக்கலாமென்று கார்யாதிகரணத்தில் ஜைமிநிமதோபந்யாஸ ப்ரகரணத்தில் ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்திருப்பதால் நித்யவிபூதியில் அநுபவஸ்தாநங்களாக பஹு லோகங்களுண்டென்றும், அந்தலோகங்களில் அநுபவவிசேஷங்களுமுண்டென்றும், அவற்றிற்கு போக்தாக்களான முக்தர்களும் பலர் என்றும் ஏற்படுகிறபடியால், ஸர்வகர்மநிர்மோகம் ஏற்பட்டபோதிலும் முக்திபேதத்திற்குக்காரணம், அந்தந்த அதிகாரிகளுடைய உபாஸநாநுகுணமாக ஏற்படுகிறபலப்ரதாநம் ஈசுவரனுடைய ஸங்கல்பமேதவிர வேறொன்றும் காரணமாகமாட்டாதென்றறியத் தக்கது.

அப்படியே ஸாக்ஷாந் நித்யவிபூதியில் பிராட்டி முதலான மஹிஷீவர்க்கங்கள், அநந்த கெருட விஷ்வக்ஸேநாதிகள் இவர்களுக்கு ப்ரதிநியதங்களான கைங்கர்யங்களுடைய வ்யவஸ்தைக்கும், அந்தந்த அதிகாரிகளுடைய ருசிபேதத்தை யநுஸரித்து ஏற்படுகிற பகவத் ஸங்கல்பமே காரணம். அங்ஙனமன்றிக்கே, 'ஐடுக்ஷ்ஹாந

வஹெத்ஸுஹ' 'பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ' என்றும், 'வைகுந்தத் தமரும் முநிவரும் வியந்தனர்'' என்றும் சொல்லுகிறபடியே அநுபவநிஷ்டர் கைங்கர்யநிஷ்டர் என்று இரண்டதிகாரிகள் ப்ரமாண ஸித்தர்களாகையால் அவர்கள் ருசிபேதத்துக்கும் பகவத்ஸங்கல்பமே காரணமென்று சொல்லவேணும். கைங்கர்யநிஷ்டருக்கு பகவத் விக்ரஹத்தினுடைய விலக்ஷண ஸௌந்தர்யாநுபவத்தால், 'காலாழும் நெஞ்சழியும்' என்கிறபடியே கரணசைதில்யமேற்படுமாகையால் அந்த ஸௌந்தர்யாநுபவம் கைங்கர்யத்துக்கு அந்தராயமென்று பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த பாசுரங்களாலும் (ஹ) பலபேதமும் ஸுஸ்பஷ்டம்.

மேலும், திருவாய்மொழியின் நாலாம்பத்து இரண்டாந் திருவாய்மொழியின் நாலாம்பாட்டில் 'கோதிலவண்புகழ்' என்பதன் வியாக்கியானத்தில் முக்தர்களில் அவரவர்களுக்கு ப்ரதிநியதகுணாநுபவமிருப்பதாயும், அவரவர்களாலநுபவிக்கப்படுகிற அந்தந்த குணங்களுக்கு அவரவர்கள் உத்கர்ஷத்தைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்றும் ஆறுயிரப்படியில் திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்திருப்பதால், நி:சேஷகர்ம நிவ்ருத்தி வந்த போதிலும் தத்தத்குணாநுபவரூபபலபேதம் பகவத்ஸங்கல்ப நிபந்தனமென்றே சொல்லவேணும்.

ஆதலால் ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாவாப்திரூபமானகைவல்யம் ப்ரக்ருதிமண்டலத்தில் ஏற்படமாட்டாதாகையால் ப்ரக்ருதி பஹிர்பூதமான நித்யவிபூதியிலேகதேசமே கைவல்யஸ்தாநமென்று கொள்ளவேண்டியது ஆவ:சியகமாகையாலும் அப்படி பஹுப்ரமாணங்களு மிருப்பதாலும். கைவல்யம் நித்யமென்றும் அதற்கு ஸ்தாநம் நித்யவிபூதியிலேகதேசமென்றும் சொல்லுமது உபபந்நம்.

தொடரும்.

ஸ்ரீ:

# 'அருள்கொண்டாடுமடியவர்'
# வ்யாக்யானம்.

---

[ஸ்ரீவானமாமலை மடாதீனத்தின் உபயவேந்த வித்வானாயெழுந்தருளி யிருந்தவரும், ஸ்ரீ. உ. வே. வித்வான் பக்ஷிராஜையங்கார் குமாரருமான வானமாமலை ஐயங்கார்ஸ்வாமி எழுதியது.]

(48-ம் பக்கத்தொடர்ச்சி.)

"யாரொருவர்க்குங் கொடுக்கிலேன்" என்றவிடம் க்ஷுத்ர நரஸ்துதி நிஷேதபரம். "மாரிமாறாத, கட்டெழிலாயிரம்" என்றதற்கு மேலே "திருவேங்கடத்துக் கிவைபத்தும் பிடித்தார்" என்று சொல்லியும் மற்ற திவ்யதேசங்களையும் கவிபாடுகையாலே தார்மி ஐக்யத்தைப்பற்ற பகவத்விஷயத்தையே சொன்னதாகும். அன்றியும் முன் சொன்ன வ்யதிரேக ஸித்தாந்தத்துக்கு இது, நேர்நில்லாது. கவிகள், தங்களுக்கு வர்ண்யமான வஸ்துக்களை உத்க்ருஷ்டமாகக் கவிபாடுகை ஸ்வாபாவிகமாகையாலே இவ்வாழ்வாரும் அப்படியே "ஞானப்பிரானையல்லா லில்லை நான்கண்ட நல்லதுவே" என்று முந்துறப் பேசினார். "நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே" என்றும், "எல்லாம் கண்ணன்" என்றும், "கண்ணனல்லாலில்லை கண்டீர்" என்றும் ஒருகால் சொன்னார். மற்றொருகால் "தயரதர்க்கு மகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்றும், "கற்பாரி ராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்றும் சொன்னார். இப்படித் தாம் கவிபாடுகிற ஒவ்வொரு அவதாரத்தையு,ம் "யாரொருவர்க்கும் கொடுக்கிலேன்" என்றும், "...திருக்கோனார்க்கே, சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லால் தன்மை" என்றும் உகந்தருளின திவ்யதேசங்களையும் உத்க்ருஷ்டமாகக் கவிபாடுகிறது இவ்வாழ்வாருக்கும் ஸ்வாபாவிகமாயிருக்கும். இத்தால் பகவத் விஷயமென்றால் தார்மி ஐக்யத்தைப்பற்ற எல்லாம் இவருக்கு உத்தேசியமாயிருக்கிறபடியும், தேவதாந்திரங்கள் பக்கல் நெஞ்சு செல்லாதபடியும் சொல்லப்பட்டதாம்.

“திருமாலவன்கவி” என்றும், “உலகம் படைத்தான்கவி” என்றும் கொண்டாடிப் பேசின இவர் பகவத் விஷயத்தைத் தள்ளித் ததீய விஷயத்தை ப்ரதாநமாகச் சொல்லுதல் கூடுமோ? அப்போது விருத்தபாஷணம் பண்ணினராகாதோ? எனில்; ஆகாது.

பிரஹ்மாவின் நியமனத்தாலே ராமகதையைச்சொல்லத்தொடங்கிய ருஷி ராமாயணம் என்று க்ரந்தத்திற்குப் பெயரிட்டிருந்தும் “[illegible]” “க்ருத்ஸ்நம் ராமாயணம் காவ்யம் ஸீதாயாச்சரிதம்மஹத்” என்றும், “[illegible]” “அப்ரமேயம் ஹிதத்ஜோ யஸ்யஸா ஜநகாத்மஜா” என்றும் பிராட்டிக்கு ப்ராதாந்யம் சொல்வது போலே ஆயிற்று, இவரும் ததீயசேஷத்வத்தையே ப்ரதாநமாகச் சொன்னது.

ருஷிதான் அப்படிச் சொல்லுகைக்கடி “[illegible]” “அநந்யாஹிமயா” என்றும், “[illegible]” “ப்ராணேப்யோபிகரீயஸி” என்றும் அவன் உகந்த விஷயத்தை ஏற்றமாகப் பேசுவது ருஷி தனக்கும் உத்தேசியமானப்போலே இவரும் (ஆழ்வாரும்) “[illegible]” “த்விதீயம் மேந்தராத்மாநம்” என்றும், “[illegible]” “மமப்ராணுஹி பாண்டவா:” என்றும், “[illegible]” “ஜ்ஞாநீத்வாத்மைவ மேமதம்” என்றும் அவன் (ஸர்வேசுவரன்) தனக்கு ஆத்மபூதராகச் சொன்ன ததீயவிஷயத்தை ப்ரதாநமாக எடுத்துப் பேசினர்.

ஈசுவரனுக்கும் தன் கவியைக் காட்டிலும் தான் உகந்த விஷயத்தின் கவியைக் கேட்பதே உகப்பாயிருக்கும். இது கண்டதெங்ஙனே யென்னில்; கம்பன் என்ற கவி அரசன் ராமாயணத்தை அரங்கேற்றற்கு நம்பெருமாள் ஸந்நிதியிலேசெல்ல, நம்பெருமாள் § “நஞ்சடகோபனைப் பாடினையோ” என்று திருவுள்ளமாக; ஆம் என்று அப்பொழுதே நூறுகவி செய்து விண்ணப்பஞ் செய்யக்கேட்டுத் திருவுள்ளமுகந்தருளினரென்று ப்ரஸித்தமிறே.

தொடரும்.

---

†-“நஞ்சடகோபனைப்பாடினையோவென்றுநம்பெருமாள்
விஞ்சியவாதரத்தாற்கேட்கக்கம்பன்விரைந்துரைத்த
செஞ்சொற்கலித்துறையந்தாதிநூறும்தெரியும்வண்ணம்
நெஞ்சடியேற்கருள்வேதந்தமிழ்செய்தநின்மலனே”

ஸ்ரீ:

# மஹாபாரதத்தாலறியப்படும் நீதிகள்.

"முன்னுமாமறைமுனிவருந்தேவரும்பிறரும்
பன்னுமாமொழிப்பாரதம்..............".

என்றபடி வேதங்களின்முடிவுகண்ட முனிவர்களாலும், தேவர்களாலும், மற்றுமுள்ள பெரியோர்களாலும் கொண்டாடப்படுகிற மஹாபாரதமென்பது இதிஹாஸங்கள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்ததாம். பலவரியபெரிய விஷயங்களைத் தன்வயினடக்கிக்கொண்டு விரித்துரைக்கும் ஆற்றல் இஃதொன்றிற்கே உளதாயிருக்கும். ஆதலால் இது, "𑌭𑌾𑌰𑌤𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋 𑌵𑍇𑌦𑌃" "பாரத: பஞ்சமோவேத:" என்று கொண்டாடப்படுகிறது.

முன்பு வேதம், மஹாமதிகட்கன்றி ஏனையோர்களாலறியவொண்ணாதபடி மிகப்பரந்து விரவிக்கிடந்தது. இங்ஙனமுள்ள வேதத்தைச் சில்வாழ்நாள் பல்பிணி சிற்றறிவுள்ள மாந்தர்கள் பகுத்தறியவொண்ணாதொழிய அது உலகில் அருகியவழக்காய் நின்றது. இதனால் தர்ம ஒழுக்கம்குன்றி உலகம் நேர்மையற்றுநின்ற நிலைமை கண்ட பகவான், வேதவியாஸரூபியாய் அவதரித்து வேதத்தை ருக், யஜுர், ஸாம, அதர்வணம் எனப்பிரித்து இவற்றை அப்யஸிப்பாரையும் முறைப்படுத்தியுணர்த்தினார்.

மேலும் இவரே வேதத்தாற் சொல்லப்படும் உண்மையான பொருள் முடிவை யாவரும் தெளிவாயறிதற்பொருட்டு மஹாபாரதமென்ற இவ்விதிஹாஸத்தை அருளிச்செய்தார். இதை இவர் முதலில் தம்புதல்வராகிய சுகப்பிர்ம்ம மஹருஷிக்குக் கற்பித்தார். பின்பு அந்தரங்க சிஷ்யர்கட்கும் உரைத்தார். அதன் பின் இது, இவருடைய சிஷ்யர்களால் அறுபதுலக்ஷம் க்ரந்தங்களாக இயற்றப்பெற்றது. அவற்றுள் முப்பதுலக்ஷம் க்ரந்தம் தேவலோகத்திலும், பதினான்குலக்ஷம் க்ரந்தம் யக்ஷராக்ஷஸ லோகங்களிலும் ஒருலக்ஷம் க்ரந்தம் இவ்வுலகத்திலும் வழங்கப்பெற்றன.

வேதம் ஒப்புயர்வற்ற பரம்பொருளின் இயல்பை எடுத்துரைப்பது போல இதுவும் (பாரதமும்) அப்பரம்பொருள் அவதரித்துச் செய்த செயலின் பெருமையைக் குறித்துணர்த்துகின்றதினுல் இதற்கு வேதத்தோடு ஒற்றுமை யுண்டாயிற்று. மேலும் இது, பகவத்கீதை என்ற சாஸ்திரத்தைத் தனக்குச் சிரோபூஷணமாகக் கொண்டு விளங்குகிறது. அறியத்தக்க எல்லாப் பொருள்களும் இதிற் பொதிந்துளது. இதிலறியப்படாத பொருள்கள் எங்குமில்லை. மதிநுட்பமுடைய சான்ரோர்களால் உய்த்துணரத்தக்க தத்வம், தர்மம், தவம், ஜ்ஞானம், ஒழுக்கம், நீதி முதலிய எல்லாம் மந்தமதிகளாலும் தெளிவாயுணரும்படி இதில் சரித்திரரூபமாக எழுதப்பெற்றுள்ளன. ஆதலால் இதிற்காணப்படும் சரித்திரங்கள் பலவற்றுள்ளும் பல நீதிகள் புலப்படுகின்றமையால், ஒருவாறு அவற்றை எடுத்து விளக்குவது இன்றியமையாததாகுமன்றே! ஆகையால் அந்நீதிகள் இங்கு எடுத்துரைக்கப்பெறும். அவை வருமாறு:—

ஸூதபுராணிகர் நைமிசாரண்யஞ் சென்று அங்குள்ள மஹரிஷிகளைப்பார்த்து 'நான் இன்று உங்களைத்தரிசனஞ் செய்ததனுல் பாக்யமுள்ளவனுனேன்; இதுநிற்க, வேதவியாஸபகவானுல் சொல்லப்பட்ட தர்மார்த்தங்கள் ஒருங்கடங்கப்பெற்ற புண்ணிய கதைகளெல்லாம் அறிந்துளேன்; இப்பொழுது அவற்றை உங்கட்குச் சொல்லவிரும்புகிறேன்; கேட்டருளவேண்டும் என்றனர்.'

இதுகேட்ட நைமிசாரண்ணியத்தில் வசிப்பவர்களான மஹரிஷிகள் புண்ணிய சரித்திரத்தைக்கேட்க ஆசைகொண்டு ஸூதபுராணிகரைச் சூழ்ந்துநின்ருர்கள். அப்பொழுது ஸூதர் அவர்களை வந்தனஞ்செய்து அவர்களது க்ஷேம வலாற்றைக்கேட்டு அவர்கள் உட்கார்ந்தபின் அவர்கள் காட்டிய ஆசனத்தைத் தாழ்மையுடன் அங்கீகரித்துக்கொண்டார். அதன் பின் மஹரிஷிகள் ஸூதரை நோக்கி நீர் எங்கிருந்து வருகிறீர்? இவ்வளவுகாலம் எங்கே சஞ்சரித்தீர்? என்றுவினுவினுர்கள். அதற்கு ஸூதர் சொல்லத் தொடங்கினுர். அது வருமாறு:—

மஹாபாரதக்கதை முழுவதும் ஜனமேஜயன் ஸர்ப்பயாகஞ் செய்தபோது அவ்வரசனுக்கு வைசம்பாயனர் சொன்னுர். அக்கதை

களை நானும் கேட்டுப்பின் பலபுண்ணிய க்ஷேத்திரம் சென்று தீர்த்த ஸ்நானஞ்செய்து ஸமந்தபஞ்சகம் என்ற க்ஷேத்திரம் சென்றேன். அவ்விடமிருந்து உங்களைத் தரிசிக்கவேண்டுமென்ற அவாக்கொண்டு இங்கு வந்தேன். உங்களை நான் பரப்பிரம்மமாகவே கருதுகிறேன்; இதுநிற்க, இப்பொழுது நான் உங்கட்கு அறம், பொருள், என்ற வற்றைப்பற்றிய புண்ணிய கதைகளைச்சொல்லவா? மஹான்களான அரசர் ரிஷிகளின் சரித்திரங்களைச் சொல்லவா? என்று கேட்டார்.

அப்பொழுது மஹரிஷிகள் வேதவியாஸபகவானால் அருளிச் செய்யப்பட்டதும், வேதத்தோடு ஒப்பாக மதிக்கத்தக்கதும், வேதப் பொருளையே அணிகலமாகக்கொண்டதும், யாவராலும் கொண்டாடத்தக்கதுமான மஹாபாரதத்தைக் கேட்க விரும்புகிறோம் என்றார்கள்.

ஸூதர், எல்லாப் பொருள்களுள்ளும் புறம்பும் வியாபித்து எல்லாக் கார்யங்களையும் தன் ஸங்கல்பத்தாலே நடத்துகின்றவனான ஸர்வேசுவரனையும் வேதவியாஸ பகவானையும் நமஸ்கரித்துக் கொண்டு சொல்லத் தொடங்கினார்.

நாராயணனுடைய கதையைக் கேட்பதாலுண்டாகும் பயனுக்குப் பிர்மசர்யமுதலான ஆச்ரமதர்மங்களை செவ்வையாய் நடத்துவதாலுண்டாகும் பலனும், புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வதாலுண்டாகும் பிரயோஜனமும் ஈடாகமாட்டா. நாராயணனுக்கு ஒப்பான தெய்வம் கடந்தகாலத்திலுமில்லை; இப்பொழுதுமில்லை; இனிமேலுமில்லை; இந்த ஸத்தியவாக்யத்தினால் நான் எல்லாவிஷயங்களையும் நிறைவேற்றுகிறேன். இந்த மஹாபாரதம் நாராயணனையே முக்யபொருளாகக் குறித்துப் பேசுகிறதினால் பெரியோர்கள் இதைப் பொன்னே போல் போற்றுகிறார்கள். வேதவியாஸ பகவான் புண்ணியக்ஷேத்ரமாகிய இமயமலையின் அடிவாரத்தில் பரிசுத்தமான குஹையில் தர்ப்பையைப்பரப்பி அதன்மேல்வீற்றிருந்து அந்தக்கரணத்தையடக்கி யோகதிருஷ்டியில் எல்லாவற்றையும் உண்மையாகக்கண்டு இந்த மஹாபாரதத்தை யருளிச்செய்தார்; என்று முன்னுரையைச் சொல்லிப் பின் வரலாற்றை உரைத்தார்.

இனி, இதுவரையும் உரைத்தவற்ருலறியப்படும் நீதிகள் உரைக்கலாகும். இங்கு ஸூதர் நைமிசாரண்யஞ்சென்று ஆங்குள்ள மஹரிஷிகளைநோக்கி யானறிந்துள்ள புண்ணிய சரித்திரங்களை உங்கட்குச்சொல்ல விரும்புகிறேன்; என்றதனுல் நல்லவிஷயங்களைப் பிறர்விரும்பிவந்து கேட்காதவிடத்தும் அவர்கட்கு விருப்பத்தை விளைவித்து உரைக்கவேண்டுமென்பது வெளியாகிறது. ஸ்ரீ உடையவர் பதினெட்டுமுறை திருக்கோஷ்டியூர்நம்பிகள்பாற் சென்று அருமையாகப்பெற்ற மந்த்ரத்தை பிறர்விரும்பிவந்து கேட்காதிருக்கவும் பூரிதானஞ் செய்தார். கீதாசார்யன் அர்ச்சுனனுக்கு ருசியைப் பிறப்பித்து அரியபெரிய விஷயத்தை உபதேசித்தான்.

மேலும் ஸூதர் மஹரிஷிகளை நமஸ்கரித்து "யான் உங்களைப் பரப்பிர்ம்மமாகவே கருதுகிறேன்; இன்று உங்களைத் தரிசித்ததனுல் பாக்கியவானுனேன்." என்றுரைத்து அவர்கள் உட்கார்ந்த பின்னர் இவர் உட்கார்ந்தார்; என்றிருப்பதால், இங்கு ஸூதர் சொல்லுதற்குக் கர்த்தாவாயிருந்தவிடத்தும் அதனுல் தமக்கோர் பெருமையுண்டெனக் கருதாது தாம் †ஸூதகுலத்திற் பிறந்தமைக்கேற்றபடி நைச்யாநுஸந்தான முடையவராயிருந்தாரென்பது விளங்கும். ஆழ்வார், ஆசார்யபதவியை நிர்வஹிக்கக் கருதியாவது க்யாதி லாப பூஜையை நினைத்தாவது பரோபதேசஞ் செய்யாதவாறு போல ஸூதருமிருந்தார். இங்ஙனமிருப்பாருரைக்கும் உரையே உறுதிபயக்கு மென்றறியத் தக்கது. "இழுக்கலுடையுழியூற்றுக் கோலற்றே, ஒழுக்கமுடையார்வாய்ச்சொல்" என்பது பொய்யா மொழியன்ருே! இது நிற்க; மஹரிஷிகள் ஸூதரை ஆதரித்து அவர் கூறும் வாய்மொழியை மிகவும் விருப்புற்றுக் கேட்டார்கள் என்றதனுன், ஒழுக்கமுடையார் எவராயினும் அவர் போற்றுதற்குரியாரென்பதும், அவர் வாய்மொழி விரும்பிக் கேட்கத்தக்கதென்பதும் புலனுகின்றன.

புண்ணியநதி ஸ்நானஞ் செய்வதாலுண்டாகும் பலனும், பிர்ம்மசர்ய முதலான ஆச்ரம தர்மங்களை அநுஷ்டிப்பதால் வரும் பிரயோஜனமும் நாராயணனுடைய கதையைக் கேட்பதாலுண்டாகும்

† ஸூதர்-பிராம்மண ஸ்தீரிக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தோர்.

பலனுக்கு ஈடாகமாட்டா என்றதனுல் எப்பொழுதும் ஹரிகதா சிரவணஞ் செய்யவேண்டுமென்பதும், அதனுல் எல்லா நன்மைகளை யுமடையலாமென்பதும் விளங்குகின்றன. நம்பூர்வாசார்யர்களும் "இத்தை யொழிய வேருென்ருல் காலக்ஷேபம் பண்ணி யறியார் கள்" என்றபடி நாராயண நாமத்தின் அர்த்தாநுஸந்தானஞ் செய்து தம் வாழ்நாளைக் கழித்தார்கள்.

ஸ்ரீ நாராயணனுக்கு ஒப்பான தெய்வம் முக்காலங்களிலு மில்லை; இந்த ஸத்தியவாக்யத்தினுல் நான் எல்லா விஷயங்களையும் நிறைவேற்றுகிறேன்; என்றதனுல் நாராயணனே பரதேவதை என்ற நிச்சயமான உணர்வு எவருக்குண்டாகின்றதோ அவர்களால் நிறை வேற்றமுடியாத கார்யமொன்றுமில்லை என்பது வெளியாயிற்று. உல கிலுள்ளார்கட்கு நாராயணனே பரதேவதையாம் என்ற நிச்சய வுணர்வு பிறத்தற்காகவே ஆழ்வார் "ஒன்றுந்தேவும்" என்ற திரு வாய்மொழியில் நாராயணனே பரதத்வமாம் என்பதற்குப் பல சான்றுகள் எடுத்தோதி "ஆதிப்பிரான் நிற்க மற்றத்தெய்வம் நாடு திரே" என்றும், "பாடியாடிச்சென்மின்" என்றும், "தெய்வமற் றில்லை பேசுமினே" என்றும், "பொலிந்துநின்ற பிரான் கண்டீர் ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே" என்றும், "மற்றத்தெய்வம் விளம்புதிரே" என்றும் பரோபதேசம் செய்தார். இது நிற்க; பிரஹ லாதாழ்வானுக்கு நாராயணனே பரதேவதை என்ற உணர்வுண் டானதினுல் அவன் ஹிரண்யனுல் நேர்ந்த எல்லாத் தீங்கினின்றும் விடுபட்டுத் தான் கருதிய பலனைப்பெற்று இன்புற்றுனென்பது பிர ஸித்தியன்ருே!

மேலும் வேதவியாஸபகவான் மனமாசற்றவராயிருந்து தம் யோகசக்தியால் எல்லாவற்றையும் உண்மையாகக்கண்டு மஹாபார தத்தை இயற்றினுர் என்றதனுல் பாரதத்திற் சொல்லப்படுமவை எல்லாம் உண்மை என்றறியத்தக்கது.

தொடரும்.

ஸ்ரீ:

# நைச்யாநுஸந்தானம்.

நைச்யாநுஸந்தானமாவது:— தன்னைத்தாழ்ந்தவனாக நினைக்கையாம். எவர்க்கும் இந்நினைவு பகவத் ஸந்நிதியில் நிகழவேண்டும். "ஈசுவர ஸந்நிதியில் தன்னுடைய நீசத்வத்தை அநுஸந்திக்கையும்" என்று லோகதேசிகன் அருளிச்செய்ததாலும் அறியலாம். இந்நினைவுடையார்க்கே ஈசுவராநுக்ரஹமுண்டாகிறது. இவ்விஷயம் இங்கு ஆராய்ந்துரைக்கப்படும். ஆழ்வார் தம்முடைய நிலைமையையும், ஸர்வேசுவரனது பெருமையையும் சிந்தித்தகாலத்தில் "தார்மிகன் வைத்த தண்ணீர்ப்பந்தலை யழிப்பாரைப்போலவும், ஊருணியில் கள்ளியைவெட்டி எறிவாரைப்போலவும், அமிருதத்திலே நஞ்சு கலந்ததுபோலவும் நித்யஸூரிகள்கிட்டி அநுபவிக்கப்படும் பரம்பொருளை நாமணுகிக்கெடுத்து விடலாகாது" என்று அகன்று நிற்கமுயன்றார். ஆனால் இவர் அவனை விட்டகன்று ஜீவிப்பரோவெனில்; ஜீவிக்கமாட்டார். ஸர்வேசுவரனுடைய முகமலர்த்திக்குரிய கார்யத்தைச்செய்ய முற்படுவார் தம்முடைய விநாசத்தையும் ஒருபொருட்படுத்தமாட்டார். *இளையபெருமாள் துர்வாஸமஹரிஷியின் சாபத்

---

* யமதர்மன் சக்ரவர்த்தித் திருமகனிடத்தில ரஹஸ்யவிஷயங்களை விண்ணப்பிக்கவந்தகாலத்து ஸ்ரீராமபிரான் இளையபெருமாளைநோக்கி "நான் இப்பொழுது யமதர்மனோடு சில ரஹஸ்யவிஷயங்களைப் பேசப்போகின்றேனாதலால் இந்தச் சமயத்தில் எவரையும் உள்ளே விடலாகாது; என்னுடைய நியமனத்திற்கு விரோதமாக எவரையாவது விடுவையாகில் என்முகத்தில் விழியாதொழிவாய்" என்று ஆஜ்ஞாபித்துவிட்டு யமதர்மனோடு உரையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது யமதர்மன் ராமபிரானைநோக்கித் "தேவரீர் அவதரித்துச் செய்யவேண்டிய கார்யங்களெல்லாம் நிறைவேறின; இனித் தேவரீர் தன்னுடை ஜோதிக் கெழுந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். இஃதிங்ஙனமிருக்க; வாயிலைக் காவல்புரிந்துகொண்டிருக்கிற இளையபெருமாளிடத்தில் துர்வாஸமஹரிஷிவந்து 'நீ என்னைப்புகுதவிடுக' என்றார். இளையபெருமாள் இதுசமயமில்லை என்று தடுக்க, அப்பொழுது மஹரிஷி 'நீ என்னை உள்ளேபுகவிடாதொழிவையேல் ராமபிரானையும், அவரது வம்சத்தையும், உன்னையும் சபித்துவிடுவேன்' என்றார். இளையபெருமாள் 'இவரை நாம் உள்ளே புகவிடாதிருந்தால் ராமபிரானுக்குக் கெடுதிநேரும்போல் தோற்றுகிற'தென்று ராமபிரான்பாற்சென்று துர்வாஸமஹரிஷி இங்குவந்துள்ளார் என்றறிவித்துவிட்டு ராமபிரானது ஆஜ்ஞையைப் பாதுகாப்பதற்காகத் தாம் நீர் நிலையிற்குதித்து உயிர்து[illegible]ந்தார்.

தால் ஒரு தீங்கும் ராமபிரானுக்கு நேர்ந்துவிடலாகாதென்று தாம் நீர். நிலேயிற்குதித்து உயிர்துறந்தாரன்றே!

இவ்வாறு தம் சிறுமையைநோக்கி அகன்றுவிடக்கருதிய ஆழ்வாரது நிலைமையைக்கண்ட ஸர்வேசுவரன் 'நாம் இவரைக்கொண்டு உலகை வாழ்விக்கக் கருதினேமே இவர் இங்ஙனம் அகன்று செல்கின்றாரே இதுவென்?' என்று ஆழ்வாரைநோக்கி ஆழ்வீர்! நீர் நம்மைவிட்டு அகன்றுவிட முயல்கின்றீரோ?

ஆழ்வார்:— நீசனை அடியேன் தேவரீரை அணுகினல் தேவரீருக்குக் குறை நேருமென்று அகன்றுவிடவே கருதுகிறேன்.

ஸர்வே:— இவ்வாறு நீர் கருதுவீரேல் உலகிலுள்ளார் என்னை 'ஏதோசிலவதிகாரிகள் சென்று பற்றத்தக்கவஸ்து; எல்லோரும் சுலபமாகக்கண்டு பற்றத்தக்கவனில்லை; இவனைக் கிட்டுவதரிது' என்று கருதி அகன்று விடுவார்கள். எவரும் என்னைப் பற்றமாட்டார்கள். உமது கருத்தால் தாழ்ந்தவராகக் கருதிய நீர் என்னைக்கிட்டுவீராகில் என்னை 'ஸர்வாதிகாரமானவஸ்து' என்று எல்லோரும் வந்து பற்றுவார்கள். ஆகலால் நீர் என்னை விட்டகல்வதே எனக்குக் குறைவாகுமேயன்றிப் பிறிதில்லை. எனக்கு ஆகாதாருண்டோ? முன்பு நான் உலகத்தை அளக்கின்றகாலத்து, அதிகாரி அநதிகாரி என்ற வேறுபாடின்றி எல்லார் தலையிலுமடியிட்டேனல்லவா? அந்நிலையை உமக்கு இப்பொழுது தரிசனந் தருகிறேன்; பார்க்கக்கடவீர்.

ஆழ்வார்:— தேவரீர் திருவுலகளந்தருளின அதிசுலபமான நிலையைக் கண்டுகளித்து உமமைக்கிட்டுவதாக நினைத்தேனையினும் தாழ்ந்தவனாகிய அடியேனோடு உயர்ந்தோராகிய நீர் மனம் வேறுபாடின்றிக்கலப்பதால் உமக்குவருகிற ஸௌசீல்யம் வேண்டா என்று கருதி அகல்கிறேன்.

ஸர்வே:— நீர் கருதியபடி எனக்கு உம்மோடு கூடுவதால் வருகிற குணாதிக்யம் வேண்டாதிருந்தாலும், உம்மைக்கிட்டுவதால் எனக்கு வாழ்வுண்டு என்று கருதுகிற நான் உமக்கு வேண்டுமன்றே! நீர் என்னைக்கூடிக்களிப்பது திருவாய்ப்பாடி வெண்ணெய்போல எனக்குத் தாரகமாகும்; இனி, நீர் அகல்

வீரேல் திருவாய்ப்பாடி வெண்ணெய் விலக்கினர் புக்கலோகம் புகுவீர் என்று விபீஷணாழ்வானுக்கு அடைக்கலந்தரலாகாதென்று தடுத்த வானரமுதலிகளையும், யுத்தஞ்செய்யமாட்டேன் என்று நின்ற அர்ச்சுனனையும் உபதேசத்தால் இசைவித்ததுபோல இவரையும் இசைவித்துத் தன்னையணுகிக்களிக்கும்படி செய்தான். இதனாலும் நைச்யானுஸந்தானமுள்ளவிடத்தில் ஈசுவராநுக்ரஹ முண்டாயிற்றென்பதறியலாம்.

இது நிற்க; பெரியாழ்வார் எம்பெருமானைநோக்கித் தேவரீரை அநுஸந்திப்பதற்குக் கருவியாயிருக்கின்ற அடியேனுடைய *வாக்கு சுத்தியில்லாததினால் [வாக்குக்கு அசுத்தியாவது:— பரஸ்தோத்திரம் செய்கையும், பகவத்ஸந்நிதியில் அசத்யம் சொல்லுகையும், ஒரு பிரயோஜனத்தை விரும்பி எம்பெருமானைத் துதிக்கையுமாம்.] ஸ்ரீய: பதியான தேவரீரை என்வாக்குக்கு விஷயமாக்கமாட்டேன். பெரியபிராட்டியாரும், வேதஸ்வரூபியான பெரியதிருவடியுமன்றோ தேவரீரை ஸ்தோத்ரம் பண்ணுதற்குரியராவார்.

ஸர்வே:— அப்படியானல் அகன்றிருக்கக்கடவீர்.

பெரியாழ்வார்:— ரஸமறியும் நாக்கு ரஸவிஷயத்தைப்பற்றிக் கிடக்குமன்றோ! தேவரீர் ஸர்வரஸமுடையீராதலால் உம்மைப்பற்றியல்லது பிறிதொன்றறியாது கிடக்கிறது. "அகலகில்லேன்" என்று பெரியபிராட்டியாருரைத்தது மார்பின் குற்றமாமாப்போல அடியேனுடைய ரஸநேந்த்ரியம் தேவரீரைப்பற்றிக்கிடப்பது தேவரீரது குற்றமாமேயன்றி அடியேனுடைய குற்றமன்று.

ஸர்வே:— அவ்வாறாயின், நாக்கு உம்மதன்றோ! அது சென்ற வழியே நீவீரும் செல்வீர்.

பெரியா:—அடியேன் நாக்கின் தோஷத்தைநினைத்து அஞ்சாநின்றேன்.

---

*வாக்குத்தூய்மையிலாமையினாலேமாதவாவன்னைவாய்க்கொள்ளமாட்டேன்
நாக்குநின்னையல்லாலறியாதுநானதஞ்சுவனென்வசமன்று
மூர்க்குப்பேசுகின்றானிவனென்று முனிவையேலுமென்னாவினுக்காற்றேன்
காக்கைவாயிலுங்கட்டுரைகொள்வர்காரணாகருளக்கொடியானே.

ஸர்வே:— அவ்விந்திரியத்திற்குக் கர்த்தாவாயிருக்கின்ற நீர் அதை வசப்படுத்திக்கொள்வதற்கு யாது தடையுள்ளது?

பெரியா:— அது அடியேனுடைய வசமாகவிருக்கவில்லை. தேவரீர் வசப்பட்டுளது.

ஸர்வே:— உம்முடைய நாக்கு என்னைப் பற்றிக்கிடக்கிறதென்றீர்; அதன்வழிச் செல்லுதற்கு அஞ்சுகிறேன் என்றீர்; இவ்வாறு ஒன்றிற்கொன்று விரோதமாக மூர்க்கர் பேசும் பேச்சுப் போல உமதுரையுமிருக்கிறதே.

பெரியா:— அடியேனுடைய பேச்சைநோக்கினால் மூர்க்கரதுரை போல் தோன்றி முனிகைக்கு யோக்யதையுண்டு. ஆனாலும் என்னுடைய நாவினுக்கு நான் ஆற்றேன். தேவரீருடைய முனிவுக்காவது ஆற்றலாம்.

ஸர்வே:— அவ்வளவு தோஷமுள்ள நாக்கு என்னைத்துதித்தால் எனக்கொருகுறையன்றோ!

பெரியா:— அற்ப ஜந்துவாகிய காக்கை ஓரிடத்திலிருந்து ஏதேனும் சொன்னாலும் அறிவுடையார் 'நமக்கு இது நன்மை சொல்கிறது' என்று கொள்வர்களன்றோ! அப்படியே அடியேன் உரைத்தவற்றை எல்லாம் தேவரீர் நல்லனவாகக் கொள்ள வேண்டும்.

ஸர்வே:— நான் அப்படிக் கொள்ளவேண்டும் என்று எனக்கென்ன விதியுளது?

பெரியா:— தேவரீர் எல்லாவற்றையும் படைத்தற்குக் காரணமாயிருக்கின்றீரல்லவா? படைத்த எல்லா ஜந்துக்களையும் பாதுகாத்தற்காகவும், அவை செய்யும் அபராதங்களைப் பொறுப்பதற்காகவும் கொடிகட்டியுள்ளீரே. இங்ஙனமிருக்கின்ற தேவரீர் அடியேன் செய்த குற்றக்களைப் பொறுத்தற்குக் கடமைப்பட்டீரன்றோ! மேலும் தேவரீரை அடியேனுடைய நெஞ்சினால் நினைப்பதும் குற்றமாகும். அவ்வாறிருக்க எனது *சழக்கு (பொல்லாத) நாவினால் கவிபாடுவதுஞ்

---

*சழக்குநாக்கொடுபுன்கவிசொன்னேன்சங்குசக்கரமேந்துகையானே
பிழைப்பராயினுந்தம்மடியார்சொற்பொறுப்பதுபெரியோர்கடனன்றே[ருது
விழிக்குங்கண்ணிலேனின்கண்மற்றல்லால்வேறொருவரோடென்மனம்பற்
உழைக்கோர்புள்ளிமிகையன்றுகண்டாயூழியேழுலகுண்டுமிழ்ந்தானே.

செய்தேன். குற்றமுடைய என்வாய்ப்பட்டதினல் கவியும் குற்றமாகிவிட்டது.

ஸர்வே:— இவ்வாறு நீர் அநுதபித்தற்குக் காரணம் என்ன?

பெரியா:— எல்லோருக்கும் அதிபதியாயிருக்கிற தேவரது பெருமையையும், அடியேனுடைய சிறுமையையும் கண்டால் அநுதபிக்காதிருப்ப தெங்ஙனம்?

ஸர்வே:— நான் எல்லோருக்கும் அதிபனுயிருப்பதை நீர் எவ்வாறறிந்தீர்?

பெரியா:— தேவரீருடைய கைகளில் விளங்குகின்ற திருவாழி சங்கங்கள் தேவரீர் அதிபராயிருக்கும் தன்மையைப் புலப்படுத்துகின்றன.

ஸர்வே:— என்னுடைய பெருமையையும், உமது சிறுமையையுங் கண்ட நீர் என்னைப்பாடா தொழிவதன்றோ முறை.

பெரியா:— அடியேன் முறையின்றித் தவறு செய்தேனுயினும் தம்மடியார் சொல்லிய பிழையைப்பொறுப்பது பெரியோர் கடமையாதலால் அடியேனுடைய பிழையைப் பொறுத்தருளவேண்டும்.

ஸர்வே:— நீர் பிரார்த்தித்தபடி உமது பிழைகளைப் பொறுத்துக் கொள்கிறேன். இது நிற்க; என்னை ஒழிய உமக்குவேறோர் ரக்ஷகரில்லையோ?

பெரியா:— தேவரீருடைய கடாக்ஷமொழிய வேறோர் ரக்ஷகம் அடியேனுக்கு இல்லை.

ஸர்வே:— என்னைப்போல் ரக்ஷகரும், போக்யருமாயிருப்பாருண்டாகில் அவரை நீர் பற்றுதற்கு யாது தடையுளது?

பெரியா:— தேவரீரிடத்தில் விளங்குகின்ற குணங்களுக்குத் தோற்றுத்தாஸனுனேனுகில் உம்மைப்போன்ற குணுதிக்யமுடையாரைக்கண்டவிடத்து அவர்கட்கும் தாஸனுவேன். உமக்கு இயல்பாகவே தாஸனுயிருக்கின்றேனுதலால் தேவரீர் குணக்கேடராயிருந்திராயினும் "வேம்பின்புழுவேம்பன்றியுண்ணு" தவாறுபோல தேவரீரைப் பற்றிக்கிடப்பேனேயன்றி வேறு போக்கிடமறியேன்.

ஸர்வே:— குற்றம் நிறைந்த உம்மைக் கைக்கொண்டால் எனக்குக் குறைவுண்டாகுமல்லவா?

பெரியா:—புள்ளிமானிற்கு ஒருபுள்ளி ஏறினாலென்? குறைந்தாலென்? அதுபோல எல்லா ஆத்மாக்களின் பிழைகளையும் அங்கீகரிக்கின்ற உமக்கு அடியேனையும் அங்கீகரித்தலால் என்ன குறைவுண்டாகும்? குற்றவாளரை அங்கீகரிக்கையன்றோ உமக்கு நிரூபகம்.

ஸர்வே:— நான் அப்படி அங்கீகரித்ததுண்டோ?

பெரியா:— ஸம்ஸாரிகளில் அபராதஞ் செய்யாதாருண்டோ? அவர்களது அபராதங்களைப் பாராமல் வயிற்றிலே வைத்து ரக்ஷித்த தேவரீர் அடியேனுடைய குற்றங்களைப்பாராமல் ரக்ஷிக்கவேண்டும்.

என்று வேண்டினார் ஸர்வேசுவரனும் இவர் பிரார்த்தனைக்கு இரங்கி அருள்செய்தான். இன்னும் "நீசனேன் நிறையொன்றுமிலேன்" என்றும், "அடியேன் சிறியஞானத்தன்" என்றும், "தூய்மையில் தொண்டனேனன் சொல்லினேன் தொல்லைநாமம்" என்றும், "விதியிலாவென்னைப்போல், பொய்பர்க்கு" என்றும், "நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்" என்றும் ஆழ்வார்கள் பலவிடங்களிலும் நைச்யாநுஸந்தானஞ் செய்துள்ளார்களாதலால் நன்னிலைபடைய விரும்புவாரெல்லார்க்கும் இவ்வநுஸந்தானம் முக்யமாக வேண்டுமென்பது விளங்கும்.

மேலும் இவ்வநுஸந்தானமுள்ளார்க்கே அஹங்காரம் ஒழியும், அஹங்காரமொழியவே பிறவிப்பிணிபகலும், பிறவிப்பிணியறவே நித்யாநந்தவாழ்வு கைகூடும். ஆகவே இந்த நைச்யாநுஸந்தானமும், நித்யாநந்தவாழ்வடைதற்குப் பரம்பராகாரணமாயிருக்குமென்பதறியலாகும்.